

கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோடு துறப்பு எம்.எம்.ஐ. ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை அமைச்சர் மனோ தங்கராஜ் வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் சிவப்பிரியா உட்பட பலர் உள்ளனர்.



செங்கோட்டை அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் கோவில் நவராத்திரி 5 ம் நாள் சிறப்பு அலங்காரத்தில் அம்மன் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

# கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு சீர்வரிசை: அமைச்சர் த.மனோ தங்கராஜ் வழங்கினார்

**கன்னியாகுமரி,அக்.01-**

கன்னியாகுமரி மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் சார்பில் திருவிதாங்கோடு துறப்பு எம்.எம். நினைவு மண்டபத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவப்பிரியா தலைமையில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி இன்று (30.09.2022) நடைபெற்றது. நடைபெற்ற நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்துறை அமைச்சர்த.மனோ தங்கராஜ் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை வழங்கி பேசுகையில்:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறது. இன்றையதினம் அன்பு சகோதரிகளின் வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கர்ப்பிணி தாய்மார்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்ற உயரிய நோக்கில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 2500 கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு தொகுதிக்கு ரூ.15 ஆயிரம் வீதம் 50 தொகுதிக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நடத்துவதற்கு தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது இந்திய துணைக் கண்டத்தில் கடந்த காலக்கட்டங்களில் கணவன் இறந்தால் பெண்கள் உடன் கட்டை ஏற வேண்டும். பெண்கள் படிக்க முயன்றால் படிக்க முடியாது. ஆண்களுக்கு நிகராக வளர முடியாது. தங்களின் உரிமைக்காக குரல் கொடுக்க முடியாது. சிறு வயதிலேயே திருமணம் செய்து கணவன் இறந்தால் மறுமணம் செய்ய முடியாது என்ற சூழ்நிலை இருந்ததோடு, பல்வேறு இடங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. தற்போதும், பெண்களை மீண்டும் பழைய அடிமை சாஸ்திரத்திற்குள் கொண்டு செல்ல வேண்டுமென்று பலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இச்சூழ்ச்சிகளை பெண்களாகிய நீங்கள் முறியடித்து சுயமாக உழைத்து பொருளாதாரத்திலும், வாழ்விலும் ஏற்றம் பெற வேண்டும்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை உண்டு என்ற சட்டத்தினை கொண்டு வந்தார்கள். டாக்டர் கலைஞர் அவர்களின் நல்வழியில் செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாளிலிருந்து பெண்கள் ஆண்களுக்கு நிகராக தங்களது வாழ்வில் ஏற்றம் பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் அவர்களுக்கு தேவையான கல்வி, வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு உரிமைகளை ஏற்படுத்தி தந்து தமிழக பெண்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் இல்லாத அளவிற்கு பல்வேறு வகையான அரியவகை பழங்கள், மருத்துவ குணமுடைய மூலிகைகள் கிடைக்கிறது மருத்துவ குணம் வாய்ந்த இயற்கை உணவுகளை தினமும் உட்கொண்டு, தாயும், சேயும் ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகிறேன். இவ்வாறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் பேசினார்கள்.

தொடர்ந்து, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பூ, வளையல், பழம் மற்றும் மங்களப் பொருட்கள் ஆகியவைகள் அடங்கிய சீர்வரிசையினை வழங்கியதோடு, ஆரோக்கிய குழந்தைகளுக்குள் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடம் பிடித்த குழந்தையின் தாய்மார்களுக்கு பரிசுகளையும், ஆறுதல் பரிசும் வழங்கினார்கள். மேலும், கர்ப்பிணி பெண்களுக்கான சமையல் போட்டிகளில் முதல் மூன்று இடத்தை பெற்று வெற்றி பெற்ற கர்ப்பிணி பெண்களுக்கு பரிசுகளையும், ஆறுதல் பரிசு ஒரு கர்ப்பிணிக்கும் வழங்கினார்கள்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் (பொ) சரோஜினி, திருவிதாங்கோடு பேரூராட்சித்தலைவர் ஷா. ஹாருன் றஷீது (நஸீர்), துணைத்தலைவர் அ.சுல்பத் அமீர், செயல் அலுவலர் வி.வினிதா, கோதநல்லூர் வட்டார மருத்துவ அலுவலர் மரு.அனீஸ், தக்கலை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜா, வார்டு உறுப்பினர்கள் ஜெயா, முஹம்மது ராபி செல்லத்துரை, தீப்தி, அய்யப்பன், பௌசியா, சுஜாதா, விக்னேஷ், மாவட்ட திட்ட உதவியாளர் (போஷன் அபியான்) ஹைமாவதி, அருளானந்த ஜார்ஜ், வீர வர்க்கீஸ், ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# கோவில்பட்டி நகரசபை கூட்டம்: சேர்மன் கருணாநிதி தலைமையில் நடந்தது





**கோவில்பட்டி அக்.01-**

கோவில்பட்டி நகர்மன்ற சாதாரண கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது. நகரசபை தலைவர் க.கருணாநிதி தலைமை வைத்தார். ஆணையாளர் ராஜாராம் முன்னிலை வைத்தார். கூட்டத்தில் துணைத்தலைவர் ஆர்.எஸ். ரமேஸ், கவுன்சிலர்கள் முத்துசெல்வி பூல்பாண்டி, முத்துபாண்டி, சீனிவாசன் ஏஞ்சலா சின்னத்துரை, லூர்துமேரி அமலிபிரகாஸ், முத்துராஜ், தவமணி, ராமர், செண்பகமூர்த்தி, கவியரசன், மணிமாலா சின்னத்துரை, ஜோதிபாசு, விஜயகுமார், சண்முகராஜ், கனகராஜ், உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பேசிய சிபிஎம் கவுன்சிலர் சீனிவாசன் எனது பகுதியில் உள்ள வேகத்தடைகளுக்கு வெள்ளை வர்ணம் பூசவேண்டும். வாறுகால்ஓடையை சீரமைத்து தரவேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். அதிமுக கவுன்சிலர் கவியரசன் பேசும்போது பாரதிநகர் மூன்றாவது மேட்டுதெரு பகுதியில் ரோடுபோடும் பொழுது கேட்வால்வுகள் சரிவர பராமரிக்காமல் விட்டுவிட்டார்கள். வேகதடைகள் வறைமுறை இல்லாமல் குறுக்கும் நெடுக்குமாக போட்டு;ளளார்கள். அதேபோல ஐயர் சுடுகாடு அருகே ஓடைகளை தூர்வார வேண்டும். பாரதிநகர் பகுதியில் உள்ள அனைத்து சாலைகளையும் சீரமைக்க ஒரு குழு ஏற்படுத்தவேண்டும். என பேசினார். அனைத்து தீர்மானங்களும் ஏக மனதாக நிறைவேற்றப் பட்ட நிறைவேற்றப்பட்டது.

# சங்கரன்கோவில் பகுதிகளில் போதைப்பொருட்கள் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## டிஎஸ்பி சுதீர் எச்சரிக்கை



சங்கரன்கோவில். அக்.1-

தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு காவல்துறை தலைவர் சைலேந்திரபாபு ஆகியோர் மாணவர்கள் போதை பழக்கத்திற்கு ஆளாக கூடாது என்ற எண்ணத்தில் போதை பொருட்களை விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்த நிலையில் சங்கரன்கோவில் பகுதியில் போதைப்பொருள் விற்பனை அதிகமாக உள்ளதாக காவல்துறைக்கு தகவல்கள் வந்தது. இந்நிலையில் மாவட்ட எஸ்பி கிருஷ்ணராஜ் உத்தரவின் பெயரில் சங்கரன்கோவில் டிஎஸ்பி சுதீர் அதிரடி நடவடிக்கையால் சங்கரன்கோவில் அண்ணா நகர் பகுதி மற்றும் ரயில்வே பீடர் சாலையிலும் டாஸ்மாக் கடையிலிருந்து மது பாட்டில்கள் வாங்கி வந்து அதில் கூடுதல் போதைக்காக பல்வேறு பொருட்களை கலந்து விற்பதாக தெரியவந்தது. இதில் அதிரடி சோதனை மேற்கொண்ட போலீசார் அதிக போதைக்காக அரசு மதுபான கடையில் இருந்து மது பாட்டில் வாங்கி வந்து அதில் உடலுக்கு கேடு விளைவிக்க கூடிய பொருட்களை சேர்த்து விற்றதாக சங்கரன்கோவில் அருகே உள்ள நகரம் பகுதியைச் சேர்ந்த கோமதி என்பவரின் மகன் சண்முகம்( 57) என்பவரையும்,சங்கரன்கோவில் கணபதி நகரை சேர்ந்த சுரேஷ்குமார் என்பவரின் மகன் கருப்பசாமிபாண்டியன் (21) என்பவரையும் அதிரடியாக கைது செய்து அவர்களிடமிருந்து 24 காலி மது பாட்டில்களை கைப்பற்றினர்.

இதேபோல் சங்கரன்கோவில் அசெம்பிளி லாட்ஜ் அருகில் உள்ள கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் விற்பனை செய்வதாக வந்த தகவலின் பெயரில் போலீசார் நடத்திய அதிரடி விசாரணையில் 585 கணேஷ் புகையிலை மற்றும் 270 கூலிப் எனப்படும் போதை புகையிலை பொருட்களையும் கைப்பற்றினர்.சம்பவத்தில் ஈடுபட்ட காயிதே மில்லத் 1ம் தெருவை சேர்ந்த முகமது ராவுத்தர் என்பவர் மகன் அப்துல் காதர்( 49) என்பவரையும் அவரது மகன் அமீர் அலி( 21) என்பவரையும் கைது செய்தனர்.

மேலும் சங்கரன்கோவில் பகுதிகளில் போதை பொருட்கள் விற்பவர்கள் சிலருக்கு மாமுல் கொடுத்து தங்கள் தொழிலை நடத்தி வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் சங்கரன்கோவில் டிஎஸ்பி சுதீரின் அதிரடி நடவடிக்கையால் போதை பொருள் விற்பவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சங்கரன்கோவில் பகுதிகளில் தடை செய்யப்பட்ட போதை பொருட்களை விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதனை கண்காணிக்க 5 பேர் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே போதை பொருள் விற்பனை செய்வோர் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என டிஎஸ்பி சுதீர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நெல்லை மாநகராட்சி எஸ்சி -எஸ்டி பணியாளர்கள் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு



**நெல்லை,அக்.01-**

மாநகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் பி முருகன் புதிய துணை தலைவராகவும் மற்றும் பாறை கடற்கரையாண்டி புதிய ஆலோசகராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

நெல்லை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு எஸ்சி -எஸ்டி பணியாளர்கள் சங்கம் சார்பில் சீருடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

நெல்லை மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தச்சை மண்டல சேர்மன் ரேவதிபிரபு கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு சீருடை மற்றும் இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் சின்னத்துரை தலைமை தாங்கினார். செயலாளர் ஆண்டி முன்னிலை வகித்தார். பொருளாளர் பசுபதி வரவேற்றார்.

இதில் துணைத் தலைவர் ஜெயராம், வட்டாரத் தலைவர் பாப்பா என்ற குமாரி, தூய்மை பணியாளர்கள் பிரிவு தலைவர் தங்கராஜ், மாநகராட்சி சங்க செயலாளர் முருகேசன், டாஸ்மாக் பிரிவு செயலாளர் ரமேஷ், ஆலோசகர் தேவதாஸ், தூய்மை பணியாளர்கள் கணேசன், சப்பானி, பாலையா, ராஜ், சின்னதம்பி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் தச்சை உதவி கமிஷனரிடம் மனு ஒன்று வழங்கப்பட்டது. அதில் நெல்லை மண்டலத்தில் 20 ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணிபுரிந்து வரும் முருகன் என்பவரை இட மாற்றம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் பொதுச் செயலாளர் உத்தரவின்படி துணைத் தலைவர் வி.முருகன் மற்றும் ஆலோசகர் பாறை கணபதி ஆகியோர் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க நீக்கப்பட்டு, மாநகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் பி முருகன் மற்றும் பாறை கடற்கரையாண்டி ஆகியோர் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

# ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் உலக இதய தின கருத்தரங்கு

**தென்காசி,அக்.01-**

ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, முதுகலை விலங்கியல் மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் உலக இதய தினம் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முனைவர். மாருதி கலை செல்வி, விலங்கியல் துறை தலைவர் வரவேற்பு உரையாற்றினார். இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் ஜெய்நிலாசுந்தரி தலைமை தாங்கி தலைமை உரையாற்றினார். தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர்மருத்துவர் ஜெஸ்லின் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்புரை ஆற்றினார் .

இதயத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்றும் ஒழுங்கான உடற்பயிற்சியை கடைபிடிக்க வேண்டும் என்றும் பெற்றோருடன் அதிக நேரத்தை செலவழிக்க வேண்டும் என்றும் மேலும் செல்போன்களை அதிக அளவு உபயோகிக்க கூடாது என்றும் இதயத்தை பாதுகாப்பதற்கான அனைத்து விஷயங்களையும் அழகாக மாணவியருக்கு புரியும் படியாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியின் நிறைவாக உதவி பேராசிரியை முனைவர் இசக்கியம்மாள் நன்றியுரை ஆற்றினார்.இந்நிகழ்ச்சியினை விலங்கியல் துறை செயலர் .ஸ்வேதா மூன்றாம் ஆண்டு விலங்கியல் துறை மாணவி தொகுத்து வழங்கினார்

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விலங்கியல் துறை பேராசிரியர்கள், வசந்தி, பாரதி, .சாந்தி பிரியா, கவிதா, கலை வாணி, .ராம லக்ஷ்மி மற்றும் ஆய்வக உதவியாளர்கள் கௌசல்யா, கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

# தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மாநில அளவிலான காயகல்ப தரசான்று குழுவினர் ஆய்வு



**தென்காசி,அக்.01-**

அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தென்காசியில் மாநில அளவிலான காயகல்ப தரசான்று குழுவினர் ஆய்வு செய்தனர்.

அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தென்காசியில் இரண்டு நாட்களாக 5 பேர் கொண்ட குழு மாநில அளவிலான காயகல்ப தரச்சான்றிதழ் ஆய்வு நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த ஆய்வில் மருத்துவமனை சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய தரத்தினை, அனைத்து வார்டுகளிலும் நேரடியாக சென்று ஆய்வு நடைபெற்று வருகிறது. நோயாளிகளுக்கு கிடைக்கும் அனைத்து வசதிகளும் தரமாக கிடைக்கிறதா படுக்கை மற்றும் படுக்கை விரிப்புகள் நோயாளிகளின் கழிவறை சுத்தமாக உள்ளதா எனவும் வார்டுகள் அனைத்தும் முறையாக கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படுகிறதா எனவும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் மற்றும் குடிதண்ணீர் அனைத்தும் பொதுமக்களுக்கு போதுமான தண்ணீர் வசதி உள்ளதா எனவும் மருத்துவமனையில் உள்ள மருத்துவ கழிவுகள் மற்றும் பொது கழிவுகள் சரியான முறையில் பிரிக்கப்பட்டு அகற்றப்படுகிறது எனவும் மருத்துவமனை வளாகத்தில் உள்ள சுற்றுப்புறத் தூய்மையும் ஆராய்ந்து அதற்கான தரச் சான்றிதழ் வழங்குவதற்கான ஆய்வு இரண்டு தினங்களாக நடைபெற்று கொண்டிருக்கிறது .

இந்த ஆய்வில் மாநில தரச்சான்று குழுவினராக பெரிய குளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் இருந்து . ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் . ராம்குமார்,கணேஷ் குமார் செவிலியர் லெனின், பஞ்சவர்ணம், சங்கீத மாரியம்மாள் ஆகியோர் கொண்ட மாநில குழுவினர் இந்த ஆய்வினை மேற்கொள்கின்றனர் அவர்களை தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை சார்பாக மருத்துவமனை கண்காணிப்பாளர் . ஜெஸ்லின் உறைவிட மருத்துவர் ராஜேஷ் , செவிலியர் கண்காணிப்பாளர் பத்மா மற்றும் ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அறிவுடைநம்பி ஆகியோர் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர் ஆய்வு பற்றி மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் ஜெஸ்லின் கூறும்போது, கடந்த வருடம் மாநில அளவில் தென்காசி அரசு மருத்துவமனை காயகல்ப் தரச்சான்றிதழ் போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்திருந்தது. இந்த வருடம் முதல் இடத்தைப் பிடிப்பதற்கான அனைத்து பணிகளும் குறிப்பாக சுற்றுச்சுவர், ஆடு மாடுகள் மற்றும் நாய்கள் நுழையாதவாறு கேட் போன்ற பொதுமக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கொடுக்கப்படும் வேலைகள் செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை பணியாளர்கள் அனைவரின் உழைப்பிற்கும் முயற்சிக்கும் உரிய பலன் கிடைக்குமென மருத்துவமனை கண்காணிப்பாளர் நம்பிக்கை தெரிவித்தார். எங்களின் இந்த முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த மாவட்ட ஆட்சித் தலைவர், இணை இயக்குனர் நலப்பணிகள் , பொதுப் பணித்துறை செயற்பொறியாளர்கள் அனைவருக்கும் மருத்துவமனை கண்காணிப்பாளர் நன்றி தெரிவித்தார் .

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

<u>தெற்குகழுநீர்குளத்தில்</u>

# ரூ.21லட்சம் மதிப்பில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி

**தென்காசி,அக்.01-**

கழுநீர்குளம் ஊராட்சி, தெற்கு கழுநீர்குளத்தில் ரூ.21 லட்சம் மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்படவுள்ளது.

கீழப்பாவூர் ஒன்றியம், கழுநீர்குளம் ஊராட்சி தெற்கு கழுநீர்குளத்தில் அமைந்துள்ள 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி பழுதடைந்து காணப்படுகிறது. இத்தொட்டியை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக அமைக்க அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று ஞானதிரவியம் எம்.பி. ரூ.12 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும் ஊராட்சி நிதி ரூ.9 லட்சத்தையும் சேர்த்து ரூ.21 லட்சம் மதிப்பீட்டில் அங்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்படவுள்ளது என ஊராட்சி மன்ற தலைவர் கை.முருகன் தெரிவித்துள்ளார்.

# நாளை மற்றும் 9ம் தேதிகளில் மதுபான கடைகளுக்கு விடுமுறை: கலெக்டர் தகவல்

**தென்காசி,அக்.01-**

காந்திஜெயந்தி 02.10.2022 மற்றும் மிலாடிநபி 09.10.2022 கொண்டாடப்படுவதை முன்னிட்டு தென்காசி மாவட்டத்திலுள்ள அனைத்து மதுபானக்கடைகள், மதுக்கூடங்கள் மற்றும் தங்கும் விடுதியுடன் இணைந்த மதுபானக்கூடங்கள் மேற்கண்ட தினத்தில் மட்டும் மூடப்பட்டிருக்கும் மற்றும் அன்றைய தினம் மதுபானம் விற்பனை ஏதும் நடைபெறாது என மாவட்டஆட்சியர் ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

# இலஞ்சி பாரத் கல்விக் குழுமத்தில் தசரா விழா

**தென்காசி,அக்.01-**

இலஞ்சி பாரத் கல்விக் குழுமத்தில் நான்காம் நாள் தசரா சூம் செயலி வாயிலாக நடைபெற்றது.

இலஞ்சி பாரத் கல்விக் குழுமத்தில் சூம் செயலி வாயிலாக நான்காம் நாள் தசரா விழா நடைபெற்றது. பாரத் கல்விக் குழுமச் செயலாளர் தலைமை தாங்கினார். முதல்வர் வனிதா, ஆலோசகர் உஷாரமேஷ் முன்னிலை வகித்தனர் சென்னையைச் சார்ந்த சத்ய நாராயணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அனுபாமா நிகழ்ச்சித் தொகுப்பு வழங்கினார். நிவேதிகா வரவேற்றார். ஸ்ரீஜித் குழுவினரின் அனுமன் நாடகம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் சத்ய நாராயணன் பஜனைப் பாடல்கள் பாடினார். ஆகாஷ் நன்றி கூறினார். பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் தசரா விழா

**தென்காசி,அக்.01-**

இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளியில் நான்காம் நாள் தசரா கொண்டாட்டம் நடைபெற்றது. அனுபாமா, முத்துச் ஜனனி இறைவணக்கம் பாடினர். சல்மா வரவேற்றார். மைமூன் நிகழ்ச்சித் தொகுப்பு வழங்கினார். 'கற்றுக் கொள்ளத் தீர்மானித்தல்' என்ற தலைப்பில் நூருல் சாஜிதா உரையாற்றினார். அஸ்வின் நன்றாகக் கற்றல் பற்றிய குறிப்புகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து ஆர்வமூட்டல் காணொளி நடைபெற்றது. மாணவி ஜெஸ்னோ நன்றி கூறினார்.பாரத் கல்விக்குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன், இயக்குநர் இராதாபிரியா, ஆலோசகர் உஷாரமேஷ் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

**தவறிவிட்டது**

நான் கடந்த 01.09.2022 அன்று தென்காசி சுவாமி சன்னதி பஜாரில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது நான் விக்கிரமசிங்கபுரம் சேனைத்தலைவர் மேல்நிலைப்பள்ளியில் பயின்ற பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்

நாகராஜ்
230B, அடையகருங்குளம்,
அம்பாசமுத்திரம்
தாலுகா – 627 425
செல்: 9789794725

**காணவில்லை**

எனது கோவில்பட்டி சார்பதிவக அலுவலக ஆவணஎண் 3220/1988 (12.12.1988) கிரையபத்திரம் ஒரிஜினல் கடந்த 10.11.2018 அன்று பாரதிநகர் எனது வீட்டருகே காணமல் போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

இவண்
ஜெயலட்சுமி,
கஎண்: 37X1, பாரதிநகர்,
3வதுதெரு,
கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம்.

வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், தென்காசி
ந.க.ஆ4 /பி.பதிவேட்டு எண்: 118383/2022

திரு.ஜெகநாத்குமார்
த/பெ. நடராஜன்,
கதவு எண். 3-8-2,
ஆர்.சி.தெரு,
தெற்குமேடு, புளியரை
செங்கோட்டை வட்டம்.
....மனுதார்

அறிவிப்பு

ஷை மனுதார் திரு.ஜெகநாத்குமார் என்பவர் தனது மகன் அருண் கடந்த 25.08.2011 ம் தேதியன்று மேற்கண்ட முகவரியில் வைத்து பிறந்ததை பதிவு செய்ய தவறிவிட்டார். மேற்படி பிறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினத்திற்குள் தென்காசி கோட்டாச்சித்தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
திரு.ஜெகநாத்குமார்

# மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு- கண்காணிப்புக்குழுக் கூட்டம் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.தலைமையில் நடைபெற்றது



**விருதுநகர் அக் 1.**

விருதுநகர் மாவட்டம் மாவட்ட ஆட்சியரக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில், வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.மேகநாதரெட்டி, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.சீனிவாசன் , சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் .ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர்கள் முன்னிலையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், விருதுநகர் மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டங்களான தூய்மை பாரத இயக்கம் - மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் (SBM), அம்ருத் திட்டம், அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டம்- பேரூராட்சிகள், அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம், பிரதம மந்திரி கனிஜ் சிட்ரா கல்யாண் யோஜனா(PMKKY), தேசிய சமூக பாதுகாப்பு திட்டம், பிரதம மந்திரி வேலை வாய்ப்பு திட்டம், பிரதம மந்திரி உஜ்வாலா திட்டம், தேசிய உணவு பாதுகாப்புச் சட்ட பொது விநியோகத்திட்டம், நில ஆவணங்கள் கணினி மயமாக்குதல், தேசிய நெடுஞ்சாலை- மத்திய சாலைதிட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், தூய்மை பாரத இயக்கம் , ஜல் ஜீவன் மிஷன் திட்டம், பிரதம மந்திரி கிராம முன்னேற்றத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள், இலக்கு நிர்ணயம் செய்யப்பட்ட பணிகள், முடிவுற்ற பணிகள், நிலுவையில் உள்ள பணிகள் குறித்தும் துறை வாரியாக ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள பணிகள் மற்றும் நடைபெற்று வரும் பணிகளை தரமாக விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

இராஜபாளையம் வட்டம், இனாம்செட்டிக்குளம் கிராமத்தை சேர்ந்த கணபதி என்பவர் வெளிநாட்டில் வேலை செய்த போது இறந்ததால், அவருக்கு வழங்கப்பட வேண்டிய சட்டபூர்வ இழப்பீடு தொகை ரூ.35,75,757- ஐ அவரின் வாரிசுதாரரான அன்னாரது மனைவி .நாகலட்சுமி என்பவருக்கு காசோலையினையும் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் பெ.திலகவதி, சார் ஆட்சியர் பிருத்திவிராஜ். திட்ட இயக்குநர் தெய்வேந்திரன், நகராட்சித் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கரிக்காலி செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் மூலம் பாளையம் பேரூராட்சிக்கு புதிய மேல் நிலைத் தொட்டிகட்ட நிதியுதவி




**குஜிலியம்பாறை. அக் 1.**

கரிக்காலி செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் மூலம் பாளையம் பேரூராட்சிக்கு புதிய மேல் நிலைத் தொட்டி கட்ட நிதியுதவி வழங்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட 4வது வார்டு பூங்கா நகரில் வசிக்கும் மக்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 3000 லிட்டர் கொள்ளளவு உள்ள புதிய மேல் நிலைத்தொட்டி நமக்கு நாமே திட்டத்தின் மூலம் கட்டுவதற்கு தனது பங்களிப்பாக செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் தனது சமூக பொறுப்புணர்வு நிதியாக ரூ.(நான்கு லட்சம்) ரூபாய் வங்கி வரைவோலையாக ஆலைத்தலைவர் கிரு-;ண்ணன் பேரூராட்சித்தலைவர் பழனிச்சாமியிடம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் செயல் அலுவலர் ராஜலட்சுமி மற்றும் பாளையம் நகர்செயலாளரும் வார்டு உறுப்பினருமான கதிரவன், துணைத்தலைவர் லதாவிஜய் பழனிச்சாமி செட்டிநாடு நிறுவன கணக்குத்துறை தலைவர் பிரசாந்த் மனித வளத்துறை தலைவர் ஜெயப்பிரகா-;காந்த் மக்கள் தொடர்பு அதிகாரி வெற்றி வேல் ஆகியோர் கலந்து கொண்டனர். செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம் அதனை சுற்றியுள்ள கிராமமக்களுக்கு கோவில் கட்டித்தருதல், குடிநீர்வசதி, சாலைவசதி, ஏழைமக்கள் பயன்பெரும் வகையில் இலவச மருத்துவ முகாம்கள் போன்ற பல்வேறு சமூகப் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# திண்டுக்கல் ஜி.டி.என்.கல்லூரியில் மனித உரிமைகள் பற்றிய அடிப்படைப் பயிற்சி

**திண்டுக்கல் அக்:-1**

திண்டுக்கல் ஜி.டி.என். கல்லூரியில் மனித உரிமைகள் பற்றிய அடிப்படைப் பயிற்சியில் 150 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

புது தில்லியில் உள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் நிதிநல்கையுடன் திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரி பொருளாதாரத் துறை சார்பில் மனித உரிமைகள் பற்றிய அடிப்படைப் பயிற்சிக்கான நிகழ்வினை நடத்தியது. பொருளாதாரத்துறை தலைவர் மற்றும் நிகழ்வு கூட்டுநர் முனைவர் பெ. ரவிச்சந்திரன் பயிற்சி நோக்கத்தை பற்றி எடுத்துரைத்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் பெ. பாலகுருசாமி தலைமையுரை ஆற்றினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் அரிமா டாக்டர் க.ரெத்தினம், இயக்குநர் முனைவர் துரை ரெத்தினம் வாழ்த்துரை வழங்கினர். திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் உட்கோட்டம் துணைகாவல் கண்காணிப்பாளர் துர்க்காதேவி முன்னிலை ஆற்றினார். முதல் அமர்வில் அருணானந்தர் கலைக்கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர் S. அருள் பிரசாத் மனித உரிமைகள் பற்றி அறிமுகத்தை வழங்கினார். இரண்டாம் அமர்வில் காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர் நக்கீரன் இந்தியாவில் உள்ள மனித உரிமை நிறுவனங்கள் பற்றி எடுத்துக் கூறினார். மூன்றாம் அமர்வில் உயர்நீதி மன்ற மதுரைக் கிளையின் வழக்கறிஞர் குளோரி அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பற்றி உரையாற்றினார். நான்காம் அமர்வில் திண்டுக்கல் நீதிமன்ற வழக்கறிஞர் ஜி.மகாராஜன் பாதிக்கப்பட்ட கூடிய குழுக்களின் உரிமைகள் பற்றி எடுத்துரைத்தார். பிற்பட்ட நலத்துறை அதிகாரி விழா நிறைவுரை ஆற்றி புஷ்பகலா மாவட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். தமிழ்த் துறைத் தலைவர் மற்றும் நிகழ்வு இணை கூட்டுநர் முனைவர் சா. சுஜாதா நன்றி நல்கினார். முனைவர் ரா. பாலசுப்பிரமணி, முனைவர் மா. முத்துமாரி, சு. கண்ணன் மற்றும் செ. அருண் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாகவும், மதிப்பீட்டாளர்களாகவும் செயல்பட்டு நிகழ்வினைச் சிறப்பாக நடத்தினர். சுமார் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# போடியில் ஆயுள் காப்பீட்டு முகவர்கள் தர்ணா



**போடி, அக். 01,**

தேனி மாவட்டம், போடியில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆயுள் காப்பீட்டு முகவர்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாலிசிதாரர்களுக்கு போனசை உயர்த்தி வழங்க வேண்டும், முகவர்களுக்கு பணிக் கொடையை ரூ.20 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும், அனைத்து முகவர்களுக்கும் மருத்துவ காப்பீடு அமல்படுத்த வேண்டும், குழு காப்பீடு திட்டத்திற்கான வயது மற்றும் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும், முகவர்களுக்கான கமிசன் தொகையை 2.5 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டும், பங்களிப்பு ஓய்வூதியத்தை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆயுள் காப்பீட்டு முகவர்கள் கூட்டுக்குழுவினர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். போடி ஆயுள் காப்பீட்டு கிளை அலுவலகம் முன் நடைபெற்ற தர்ணா போராட்டத்தில் போடி கிளை ஆயுள் காப்பீட்டு முகவர்கள் சங்க தலைவர் பாஸ்கரன் தலைமையில் முகவர்கள் பலர் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர். முகவர்கள் மணவாளன், சரவணன், பரணி, சுருளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒரு மணி நேரத்திற்கும் மேல் நடைபெற்ற தர்ணா போராட்டத்தால் பொதுமக்கள் காப்பீட்டு அலுவலகத்தில் பிரிமியம் தொகை செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டது. தொடர்ந்து மாலையிலும் போராட்டம் நடைபெற்றது.

# முதுகுளத்தூரில் மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை



**முதுகுளத்தூர்.அக்.1.**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் பேரூராட்சிக்கு உட்பட்ட வணிக வளாகம் அமைக்க பணி நடைபெற்று வருகிறது. வணிக வளாகத்தில் அரசு ஆணைப்படி மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு முறைப்படுத்த வேண்டும் என்றும் மாற்றுத்திறனாளிக்கு ஏற்ப கட்டிடங்கள் அமைக்க வேண்டும் -முதுகுளத்தூர் பேரூராட்சி தலைவரிடம் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாவலர் உரிமைகளுக்கான சங்கம் முதுகுளத்தூர் தாலுகா குழு சார்பாக கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. இதில் சங்கம் சார்பாக மாவட்ட தலைவர் ராஜேஷ் மற்றும் முதுகுளத்தூர் தாலுகா பொறுப்பாளர் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# டாஸ்மாக் மதுபான விற்பனைக் கடைகள் ஒரு நாள் மட்டும் தற்காலிகமாக மூடப்படுகிறது

**விருதுநகர் அக் 1.**

விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் *F.L-1, F.L-2, F.L-3, F.L-3A, FL-3AA* மற்றும் *FL-11* ஆகிய மதுபான உரிம ஸ்தலங்களை, *2003*-ம் ஆண்டைய தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளின் விதி *12* துணை விதி *(1) 1981*-ன்படி, காந்தி ஜெயந்தி தினமான *02.10.2022* அன்று ஒரு நாள் மட்டும்; தற்காலிகமாக மூடுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை மீறி செயல்படும் டாஸ்மாக் நிறுவனப் பணியாளர்கள் *F.L-1, F.L-2, F.L-3, F.L-3A, FL-3AA* மற்றும் *FL-11* மதுபான ஸ்தலங்களின் உரிமதாரர்களின் மீது *The Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981*-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர்; ஜெ.மேகநாதரெட்டி, தெரிவித்துள்ளார்.

# மொபைல் ஒன் ஸ்டுடியோ பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 10 விற்பனை நிலையங்கள் துவக்கம்

**சென்னை.அக்.01.**

கான்க்ரூயன்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனமானது இன்று (செப்டம்பர் 28, 2022) மொபைல் ஒன் ஸ்டுடியோ பிரைவேட் லிமிடெட் மூலம் Mi-க்காக ப்ரத்யோக 10 மொபைல் ஸ்டுடியோக்களை தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் திறந்து வைத்துள்ளது. தொழில்துறையில் மெகா நிகழ்வாக இது பார்க்கப்படுகிறது. இந்த விற்பனை நிலையங்களின் திறப்பு விழாவானது வேளச்சேரி ஷோரூமில் (எண். 41/348/1, வேளச்சேரி மெயின் ரோடு, முதல் பிரிவு, விஜயா நகர், வேளச்சேரி, சென்னை 600042) நடைபெற்றது. இந்நிகழ்வில், ஜியோமி மற்றும் மொபைல் ஒன் ஸ்டுடியோ பிரைவேட் லிமிடெட் நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

"இந்தியா முழுவதும் வலுவான தடம் பதிக்க வேண்டும் என்ற எங்கள் பார்வையுடன், அடுத்த நகர்வாக மொபைல் ஸ்டுடியோ நிறுவனத்தின் தமிழ்நாடு முழுவதும் 10 ஸ்டோர்களை அறிமுகப்படுத்துவதில் பெருமையுடம் மகிழ்ச்சியும் அடைகிறோம். சிறந்த சில்லறை விற்பனை மற்றும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்துடன் Mi Studio 2.0 திட்டத்தை மேம்படுத்த, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து இடங்களையும் சென்றடைவதே மொபைல் ஸ்டுடியோவின் இலக்காகும். வருகிற 2022 டிசம்பரில் 32 கடைகளைத் திறக்க திட்டமிட்டுள்ளோம்" என்றார் கான்க்ரூன்ஸ் ஹோல்டிங்ஸ் தலைவர் ஷபீர் ஹுசைன் எப்.

# முதுகுளத்தூர் டெப்போ முன்பு ஆர்ப்பாட்டம்



**முதுகுளத்தூர்.அக்.1.**

அரசு போக்குவரத்து கழகம் சிஐடியு தொழிற்சங்கம் சார்பாக முதுகுளத்தூர் பணிமனையில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஓய்வு பெற்ற தொழிலாளிக்கு பண பயனை உடனே வழங்கிடுதல் -ஓய்வு பெறும் தொழிலாளர்களை வெறும் கையோடு அனுப்பாதே-தேவைக்கேற்ப உபகரணங்களை வழங்கிடு- காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடைபெற்றது இந்த போராட்டத்தில் முதுகுளத்தூர் பணிமனையின் சிஐடியு தலைவர் மாரீஸ்வரன் தலைமை தாங்கினார் .செயலாளர் திருமலை முன்னிலை வகித்தார் .கே. முனியசாமி உட்பட தொழிலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## புதிய குடியிருப்பு ரியல் எஸ்டேட் துறையில் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியில் 61 சதவீதத்தை எட்டியுள்ளது, ப்ராப்டைகர்.காம் அறிக்கை

**சென்னை.அக்.01.**

பண்டிகைக் காலம் முழு வீச்சில் உள்ள நிலையில், இந்தியாவின் ரியல் எஸ்டேட் டெவலப்பர்கள், இந்தத் துறை மீட்சியை நோக்கி நகர்ந்து வருவதை பற்றி நம்பிக்கையுடன் உள்ளனர், மேலும் அவர்களின் விருப்பம் ஏற்கனவே நிறைவேறி வருகிறதென்பது ஹைலைட். Q3 2021 (ஜூலை - செப்டம்பர்) உடன் ஒப்பிடும் போது, புதிய விநியோகம் 61 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

ரியல் இன்சைட் ரெசிடென்ஷியல் படி, கடந்த ஜூலை-செப்டம்பர் 2022 காலக்கட்டத்தில் REA இந்தியாவுக்குச் சொந்தமான டிஜிட்டல் ரியல் எஸ்டேட் பரிவர்த்தனை மற்றும் ஆலோசனை சேவைகள் தளமான ப்ராப்டைகர்.காம் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட குடியிருப்பு சந்தை டிரெண்டுகள் குறித்த காலாண்டு அறிக்கை வெளியாகியுள்ளது. அதன்படி, வலுவான தேவையின் பின்னணி தெரியவந்துள்ளது. அதன்படி, 83,220 யூனிட்களின் விற்பனையை பதிவுடன் 2022 ஜூலை-செப்டம்பர் இடையே 49% வளர்ச்சி எட்டியுள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் விற்பனை செய்யப்பட்ட 55,910 யூனிட்கள் மட்டுமே பதியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

"ரியல் எஸ்டேட் தொழில் தொற்றுநோய் மற்றும் அடுத்தடுத்த இடையூறுகளிலிருந்து மீண்டு வருகிறது, மேலும் இது எங்கள் அறிக்கையில் உள்ள தரவு போக்குகள் மற்றும் நுண்ணறிவுகளிலிருந்து தெளிவாகிறது. குறிப்பாக பண்டிகைக் காலம் தொடங்கியுள்ள நிலையில், சொத்து முதலீடுகள் மீதான நுகர்வோரின் நேர்மறையான எண்ணங்களில் தொடர்ச்சியான எழுச்சியை நாங்கள் அனுபவித்து வருகிறோம். இந்த ஆண்டின் Q3 வீட்டுத் தேவையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது, மேலும் இது அடுத்த காலாண்டிலும் உச்சம் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.: என்று ஹவுசிங்.காம், ப்ராப்டைகர்.காம் மற்றும் மக்கான்.காம் நிறுவன குரூப் CFO விகாஸ் வாத்வான் கூறினார்.

# திருமங்கலம் அருள்மிகு எட்டுப்பட்டறை ஸ்ரீ பத்ரகாளி முத்துமாரியம்மன் திருக்கோவில் புரட்டாசி பொங்கல் திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கியது



**திருமங்கலம்.அக்.01.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் கொல்லர் திடலில் அமைந்துள்ள அருள்மிகு எட்டுப்பட்டறை ஸ்ரீ பத்திரகாளி முத்துமாரியம்மன் திருக்கோவிலின் 25வது ஆண்டு புரட்டாசி பொங்கல் விழா கொடியேற்றத்துடன் கோலாகலமாக துவங்கியுள்ள நிலையில் முக்கிய நிகழ்வாக வரும் 10-ம் தேதி பூக்குழி பெருவிழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

பழம்பெரும் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை மாநகரின் புறநகரமாக உள்ள திருமங்கலம் வில்வ வனத்தில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவிலுக்கு தென்புறம் கன்னி திசையில் குண்டாற்றின் கிழக்கு கரையில் அமர்ந்துள்ள கருணை வடிவமான கிராமத்து தேவதையாக வீற்றிருந்து குலதெய்வமாகவும் ரட்சிக்கின்ற எட்டுப்பட்டறை அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி முத்து மாரியம்மன் திருக்கோவிலின் 25வது ஆண்டு புரட்டாசிப் பொங்கல் விழா நேற்று கொடியேற்றத்துடன்வெகு சிறப்பாக துவங்கியது.அதன்படி கடந்த நேற்று துவங்கிய இந்த புரட்டாசி பொங்கல் விழா வரும் 12-ம் தேதி வரை நடைபெறுகிறது.இதையொட்டி தினம் தோறும் எட்டுப்பட்டறை ஸ்ரீ பத்திரகாளி முத்துமாரியம்மனுக்கு அபிஷேகம்,அலங்காரம் மற்றும் தீபாராதனையுடன் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகிறது.

அதன்படி முதலாம் நாள் திருவிழாவான நேற்று கொடியேற்றம் முடிந்து சிறப்பு பூஜையுடன் காப்பு கட்டுதல் மற்றும் மாலையில் பூச்சொரிதல்விழா நடைபெற்றது.பின்னர் வரும் 7-ம் தேதி காலை அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு அன்னதானம் மற்றும் மாலையில் சாமி புறப்பாடும் நடைபெறுகிறது.வரும் 8-ம் தேதி காலை அம்மனுக்கு சிறப்பு அலங்காரம்,மஞ்சள் நீராட்டு மற்றும் மாவிளக்கு எடுத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.வரும் 9-ம் தேதி மாலை மாலையில் திருவிளக்கு பூஜை நடத்தப்பட்டு பிரசாதம் வழங்கப்படுகிறது. நடைபெறுகிறது.வரும் 10-ம் தேதி மாலை பக்தர்கள் அக்கினி சட்டி எடுக்கும் வைபவம் நடைபெறுகிறது.இதனை தொடர்ந்து வரும் 11-ம் தேதி விழாவில் மதியம் அக்னிப்பூ வளர்த்து மாலையில் சிறப்பு பூஜை வழிபாட்டுடன் பக்தர்கள் பூக்குழி இறங்கி சிறப்பு வழிபாடு செய்திடும் நிகழ்வு நடைபெறுகிறது.விழாவின் கடைசி நாளான 12-ம் தேதி திருவிழாவன்று ஸ்ரீபத்திரகாளி அம்மனுக்கு பொங்கலிட்டு சக்தி கிடாய் வெட்டுதல் மற்றும் மாலையில் கோவிலிலிருந்து பக்தர்கள் முளைப்பாரி எடுத்துச் சென்று குண்டாற்றில் கரைத்தல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெறுகிறது.ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு அம்மனை வழிபடும் இந்த திருவிழாவிற்கான ஏற்பாடுகளை கோவிலின் டிரஸ்டி ஜே.டி.விஜயன் தலைமையில் நிர்வாகக் குழுவினர்,விழாக்கமிட்டி மற்றும் மேற்கு வட்டார இளைஞர் அணியினர் சிறப்புடன் செய்து வருகின்றனர்.

# சிந்தலவாடம்பட்டியில் நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு பூமி பூஜை



**ஒட்டன்சத்திரம்.அக்.1.**

திண்டுக்கல்மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட சிந்தலவாடம்பட்டி ஊராட்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனையின்பேரில் ராமபட்டினம்புதூர் முனியப்பன் சுவாமி கோயில் அருகே பொது மக்கள் பயன்பாட்டிற்காக ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் புதிய தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில்ஒன்றிய செயலாளர் தர்மராஜன், ஒன்றியக் குழு உறுப்பினர் ரேவதி சேகர்,ஊராட்சி மன்ற தலைவர் பன்னீர்செல்வம்,துணைத் தலைவர் காளீஸ்வரி விஜயராஜ், ஊராட்சி செயலர் செல்லமுத்து உள்ளிட்டார் வார்டு உறுப்பினர்கள், நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

# முதுகுளத்தூரில் பாரம்பரிய அறுபதாம் குறுவை நெல் இரகம் விதைப்புப் பணிகள் ஆய்வு



**முதுகுளத்தூர்அக்1**

முதுகுளத்தூர் வட்டாரத்தில் நெல், சிறுதானியங்கள், பருத்தி மற்றும் மிளகாய் சாகுபடி செய்வதற்கான பணிகள் முழுவிச்சில் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் வேளாண்மை - உழவர்நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளை வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) பாஸ்கரமணியன் ஆய்வு செய்தார். நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்திற்காக தேர்வாகியுள்ள வளநாடு கிராமத்தில் மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமான மரபுசார் நெல் இரகங்;கள் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 60 முதல் 70 நாளில் விளைச்சலுக்கு வரக் கூடிய பாரம்பரிய நெல் இரகமான அறுபதாம் குறுவை நெல் விதைகள் நேரடி நெல் விதைப்பு கருவி மூலம் விதைக்கப்படுவதை ஆய்வு செய்தார். பின்னர், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் தொகுப்பு செயல்விளக்கம் அமைப்பதற்குத் தேர்வாகியுள்ள வயல்களில் கோ-51 இரக நெல் விதைகள் வரிசையில் எந்திரம் மூலம் விதைக்கப்படுவதை ஆய்வு செய்தார். பின்னர் அங்கு கூடியிருந்த விவசாயிகளிடம்; பேசிய அவர் விவசாயிகள் தற்போது அதிகஅளவில் களைக்கொல்லிகளைப் பயன்படுத்துவதாகத் தெரிவித்தார். களைக்கொல்லி மருந்து தெளிப்பதைத் தவிர்க்க விதைகளை வரிசையில் விதைக்க வேண்டும் என்றார். வரிசையில் விதைப்பதன் மூலம் களைகளை எடுப்பதற்கு களையெடுக்கும் கருவிகள் உள்ளிட்ட பலவகையான கருவிகளை பயன்படுத்தலாம் இதனால் களைக்கொல்லியால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மண்ணைப் பாதுகாக்கலாம் என்றார். பின்னர், இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக மண்புழு உரம், அமிர்தக் கரைசல், பஞ்சகவ்யம் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்வதற்காக மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் தேர்வாகியுள்ள வளநாடு உழவர் உற்பத்தியாளர் குழுவினருடன் ஆலோசனை மேற்கொண்டார். மண்வளத்தை பெருக்க தக்கைப்பூண்டு செடிகள் மண்ணுடன் சேர்த்து மடக்கி உழுவதைப் பார்வையிட்டார். ஆய்வின் போது முதுகுளத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேசவராமன் உடனிருந்தார். துணை வேளாண்மை அலுவலர் தனதுரை மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் முத்துராஜ் ஆகியோர் ஆய்விற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# சிவகாசியில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

**விருதுநகர் அக் 1.**

சிவகாசி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குனர் அலுவலகம் முன்பு 50 சதவீத போனஸ் உயர்த்தி வழங்க கோரி பட்டாசு, தீப்பெட்டி தொழிலாளர்கள் நலச் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் முருகன் தலைமை வகித்தார். 35 ஆண்டுகளாக உயர்த்தப்படாத போனஸ் தொகையை 50% உயர்த்தி வழங்க வேண்டும். விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு 40 சதவீதம் கூலி தேர்வு வழங்க வேண்டும் .சுற்றுச்சூழல் விதிகளில் இருந்து பட்டாசு தொழிலுக்கு விளக்கு அளிக்க வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சிஐடியு மாவட்ட தலைவர் மகாலட்சுமி ,செயலாளர் தேவா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

